உ

கணபதிதுணை.

உலகநாத பண்டிதர்

இயற்றிய

# சாதிபேத விளக்கம்.

இஃது

யாழ்: சி. செல்லையா பிள்ளையால்

ஷை யூர்

மகாவித்துவான்

ப்ரஹ்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் அவர்கள்

முன்னிலையிற் பரிசோதித்து

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

விலை அணா 2.

# பதிப்புரை.

"சாதிபேத விளக்கம்" என்னும் இந்நூற்காசிரியர், உலகநாத பண்டிதர் என்ப. இவர் சாதியில் நாவிதன் எனப்பட்டாராயினும் இவரது சனன மரண தேச கால வரையறை நன்ருய்ப் புலப்படவில்லை.

புகழேந்திப்புலவர் ஒட்டக்கூத்தராற் சிறைபிலடைக்கப்பட்டிருந்த காலத்தில், அவ் ஒட்டக்கூத்தர் சோழராஜன் சமஸ்தானத்தில் பரிசுவாங்கவரும் வித்துவான்களைக் காவலில் வைத்து நவராத்திரி யுற்சவத்தில் அவர்களை அழைப்பித்துத் தாம் கேட்கும் கேள்விகளுக்கு உத்தரஞ் சொல்லாதவர்களை அவமதித்துத் தண்டப்படுத்துகிற வழக்கப்படி, புகழேந்திப் புலவருடன் சில புலவர்களைச் சிறை செய்வித்திருந்தார். அவர்களில் குயவன், கம்மாளன், வண்ணான், அம்பட்டன், வேளாளன் ஆகிய ஐவருக்கும் புகழேந்திப்புலவர் விசேடமாகக் கல்வி கற்பித்துச் சமர்த்தர்களாக்கி நவராத்திரிகாலத்தில் அவர்களால் ஒட்டக்கூத்தரின் கர்வத்தை யடக்கினரென்பது சரித்திரம். உலகநாதன் என்னும் புலவரே அப்புகழேந்திப் புலவர் பெருமானுற் கல்வி பயிற்றப்பட்ட அந் நாவிதனெனச் சிலர் உத்தேசிக்கின்ருர்கள். இவரே "உலகநீதி" பாடியவரும்; ஔவையாரல்லர்.

எமக்குக் கிடைத்த இந்நூற் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றை ஆராய்ந்தபோது, ஒவ்வொரு பிரதியிலும் சிற்சில பகுதிகள் சிதைந்து காணப்பட்டன. * சிலாவத்தில் நியாய துரந்தரராகவும், டிஸ்திறிக் முதலியாராகவு மிருந்து "கலியுகக் குறிப்பு" முதற் சில நூல்களுக்கு அக்கியோனுக விளங்கிய ஸ்ரீ கி. வி. பவுலீக்குப்பிள்ளை முதலியாரவர்களிடம் நூறு வருடங்களுக்கு முன் எழுதப்பட்டிருந்த பிரதியை அவரது புத்திரர் அன்போடு உதவப்பெற்று, அதையே ஆதாரமாகக்கொண்டு, யாழ்ப்பாணம், வட்டுநகர் மகாவித்துவான் ப்ரஹ்மஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவாசாரியர் அவர்கள் முன்னிலையிற் பரிசோதித்து யாவருக்கும் பயன்படுமாறு இதை அச்சிடுவித்தேம்.

இங்ஙனம்,

சி. செல்லையாபிள்ளை.

---

* கொழும்பிலிருந்து 50-மைல் தூரத்துள்ள ஓர் சிறநகர். வடமேல் மாகாணப் பிரிவைச் சேர்ந்தது.

சிவமயம்.

# சாதிபேத விளக்கம்.

## காப்பு.

ஆதியெனு நூறெரித்தே யான்றவர்கள் சொல்சாதி
பேதவிளக் கந்தன்னைப் பேசுதற்குச்—சோதியருள்
பூரணத்த னற்புதத்தன் பொற்பகத்தன் கற்பகப்பேர்க்
காரணனுந் தந்திமுகன் காப்பு.

## சபாநாதர் வணக்கமும் நூற்பெயரும்.

நலம்பயி லுமைகண் டேத்த நாகரும் புலியும் போற்ற
நிலம்பயி லந்த கார நீங்கவு நீங்காக் கங்கை
யலம்புசெஞ் சடைக டாழ வம்பலத் தாடு மையர்
சிலம்பணி கமலம் போற்றிச் செப்புவன் சாதி பேதம். (௧)

## அவையடக்கம்.

நெற்சாதி பேதம் போல நிலந்தனிற் கலந்து தோன்று
முற்சாதி பேத மெல்லா முறைபுற மொழிகை யாலே
சொற்சாதி பேத முற்றுந் துணிந்திடா தெமது சொல்லு
நற்சாதி பேதத் துள்ளோர் நவின்றிடார் நவையி தென்றே. (௨)

## ஆக்கியோன் பெயர்.

புவியுறுங் கலியி னீட்டம் பொருந்தலிற் சாதி பேதத்
தவரவ ரொழுக்கங் குன்று தாகமப் பொருளை யெல்லாத்
தவநெறி யுலக நாதன் றமிழினுற் றருக வென்னச்
சிவனருள் கருதி யானுஞ் செப்புவன் செய்யு ளாக. (௩)

## பதிகம்.

வேதநால் வகைதெ ரித்த வியாதனு ருரைத்த நூலு
மாதவிபத் துடன்வை கான மாமுனி யுரைத்த நூலுஞ்
சூதசங்கிதையு மெங்கோன் சுப்பிர பேத மென்றே
போதுமா கமமுங் கண்டே யுரைப்பன்யான் சாதி பேதம். (௪)

### நூற்பயன்.

தேசிக ராகச் சைவ திட்சையைப் பெறுக மிக்க
வோசைகொள் சிவாக மாதி யுரைப்பதோ டொழுக்க மெல்லாம்
மாசறு நாலு ரைத்த மரபினர்க் கன்றி யாகா
நேசமோ டிவைவி ளங்க நெறிபல விளங்கு மன்றே. (௫)

### சாதித்தொகை.

சாதிநால் வகைய தாமச் சாதியி னநுலோ மத்தின்
பேதமோ ராறுங் கைத்தாம் பிரதிலோ மமுமோ ராறு
மீதிலா மந்த ராள ரீராறும் விராத்தி யந்தான்
மூதுரை தெரிந்த பேர்க்கு முடிவுற மொழியொன் றாதே. ✓ (௬)

### சைவபேதம்.

ஐந்தெனுஞ் சைவ பேதத் தடைவினை யுரைக்குங் காலே
முந்தவே யனாதி சைவ மூர்த்தியாஞ் சதாசி வன்றன்
தந்திட வாதி சைவர் சதுமுகன் முகத்தி னூடே
வந்தன ரவரே சைவ மறையவ ராவ ரன்றே. (௭)

### சைவர் தொழில்.

மிகைதரு மகாசை வந்தான் வேதியர் குலத்தி னோர்க்காம்
வகைதரு மனுசை வந்தான் மன்னவர் வணிகர்க் காகுந்
தொகையவாந் தரசை வந்தான் சூத்திர குலத்தி னோர்க்காந்
திகழுமிம் மூவர் சைவ தீக்கையிற் சைவ ராவார். (௮)

### ஆதிசைவர்.

நீற்றணி புனையு நெற்றி நீதிசே ராதி சைவ
ரோற்றமா மாதி பூசை யுயர்பிர திட்டை சாந்தி
சாற்றருஞ் சிவாக மத்தின் றந்திரப் படிவ மூமற்
போற்றரு மகாலிங் கத்தின் பூசனை புரிவ ரன்றே. (௯)

### மகாசைவர்.

பாசமில் தீக்கை தன்னற் பரார்த்தத்தை மகாசை வத்தோர்
பூசனை புரிவர் மெய்ம்மை புராணநூற் கருத்தி னாலே
தேசிக ராகி மிக்க சிவாகமங் களுமு ரைத்தே
ஆசில்மற் றிருவர் தாமு மான்மமாம் பூசை செய்வார். (௧௦)

### சாதித் தோற்றம்.

அருநான் முகன் முகத்தி லந்தணர் மரபுண் டாகத்
தோளினி லரசர் வர்க்கந் தோன்றிடத் துடைக டன்னில்
மீளவும் வணிகர் தங்கள் மெய்க்குல முதிக்கத் தாய
[illegible] சாதியுஞ் சனிக்க தன்றே. (௧௧)

### அந்தணர்.

ஓதலே பிறர்க்குத் தாமே யோதுவித் திடுதல் மிக்க
வேதவேள் விகளி யற்றல் வேட்பித்தல் வேட்ட பேர்க்கே
ஈதலீந் திடுவோர் தம்பா லேற்றிட லேற்ப தாக
வாதினான் மறையோர் செய்யு மறுதொழி லாகு மன்றே. (௧௨)

### அரசர்.

உரைசெய்மா மறைக ளோத லுத்தம வேள்வி செய்தல்
வரைவறக் கொடுத்தல் தங்கள் மரபியல் வழாது போற்றல்
தரைதனை முறையிற் காத்தல் தனுவேதந் தனையி யற்றல்
அரசர்தங் குலத்துக் கேற்ற வறுதொழி லாகு மன்றே. (௧௩)

### வணிகர்.

மகந்தனைப் புரிதல் மிக்க மறைதனை யோத லீதல்
சகந்தனி லுளம ருந்துச் சரக்கொடு மணிபொன் வெள்ளி
உகந்தவா ணிபங்கள செய்த லுழவொடு பசுக்கள் காத்தல்
அகந்தையில் வணிகர் தங்க ளறுதொழி லாகு மன்றே. (௧௪)

### வேளாளர்.

உழவொடு பசுக்கள் காத்த லுற்றவா ணிபங்கள் செய்தல்
மொழிதரு மறையோ ராதி மூவர்க்கு மனுகூ லஞ்செய்
தொழில்பல வியற்ற லென்னுஞ் சூத்திரர் தொழில தாகும்
வழிமுறை தவறி னன்னோர் வழங்குசண் டாள ராவார். (௧௫)

### அநுலோமாதியர்.

உயர்ந்தவா ணிழிந்த பெண்பா லுறிலனு லோம மெய்தும்
பெயர்ந்துமா ணிழிவ தாகிற் பிரதிலோ மங்க டோன்றும்
உயர்ந்திடா திவர்சே ரத்தி லந்தரா ளங்க ளாகும்
வியந்திவர் சங்கா தத்தில் விராத்தியம் பலவுண் டாமே. (௧௬)

### அலபர்.

அந்தணர் தங்கு லத்தி னழகிய கன்னி கற்பாற்
றந்திடு மலகர் சைவ தந்திர முழுது மோதி
மந்திர முந்நூல் தாங்கு மானுட லிங்கந் தன்னைக்
கந்தமா மலரா லேத்துங் கானீன ராவ ரன்றே. (௧௭)

### சூதர்.

மன்னனுக் கரசன் வேட்ட மறைக்குலத் தினிலு தித்தே
புண்ணிய பாவஞ் சொல்லும் புராணிக ராவர் சூத
ரெண்ணிய பிரதி லோம ரிடங்களி லால யங்கொள்
கண்ணனை யருச்சித் தல்லவை கான[illegible] ராவ ரன்[illegible] ([illegible])

### தூதர்.

வித்தக வணிகன் பார்ப்பான் விதவைபாற் றந்த தூதர்
சுத்தநூ லோதி வேந்தர் தூதராய் மயானத் தெய்தி
அத்தனைப் பூசை செய்வர் மதிகொளா லயத்தில் விழு
மத்தியை யெடுப்பா ராகி லத்திதா ரிகளு மாவார். (௧௯)

### துண்டக கோளகர்.

ஆளனு மிருப்பச் சோரத் தந்தணன் றன்குலத்தாள்
தோளணைந் திடவே வந்து தோன்றினோர் குண்ட ராவார்
மீளவுந் தன்குலத்தில் விதவையைப் பொருந்த வந்தோர்
கோளக ரவரி யற்கை குறித்துட னுரைத்தல் செய்வாம். (௨௦)

### துண்டக கோளகரின் றொழில்.

அருங்காயந் தன்னில் மூன்று லணிந்தவே தியரு மாவர்
ஒருங்காய சிராத்தம் வேள்வி யோதலுக் குரிய ரல்லர்
மருங்காய தோப்பு வைக்கும் வாணிப மங்குண் டாக்கும்
பெருங்காய விலையிற் பெற்ற பெறுதிகொள் கனுக்க ராமே. (௨௧)

### தெலுங்கப் பிராமணர்.

பதமைசேர் மறையோர் வேந்தர் பாவையை வேட்க வந்தோர்
விதமுட னுயர்தெ லுங்க வேதிய ராகி மிக்க
அதர்வண தனுவே தத்தோ டாயுள்வே தமும்ப யின்றே
மதகரி பரிதே ரூர்வர் மன்னவர் சேனை காத்தே. (௨௨)

### காணியாளர்.

மறையவர் மன்னர் மாதை மணந்திடுங் களவில் வந்தோர்
குறையறு காணி யாளுங் குலம்பெறு மறையோ ராகி
யிறைவரா மன்ன வர்க்கே யியம்புவார் பழமை யெல்லா
முறையுறப் பரிதே ரூர்ந்து முடிமன்னர் சேனை காப்பார். (௨௩)

### அபிடேகர்.

ஆரணந் தருகுலத்தோ ரரசர்தங் கன்னி செம்பொற்
பூரண கொங்கை புல்கப் பொருந்திடுங் காணி யாளர்
காரண மருத்து நூன்மெய்க் கணிதநூல் கற்று ரைத்தல்
சேரணி யபிடே கந்தான் செயப்பெறில் வேந்து மாவார். (௨௪)

### போசர்.

வட்டமா முபய கொங்கை மன்னவர் மங்கை தன்னைத்
துட்டரா மரசர் புல்குஞ் சோரத்தில் வந்த போசர்
அட்டமங் கலங்க ளம்மன் னபிடேகம் புரிவ தன்றிப்
[illegible] பண்பர் பாக்கிய னட்சே விக்கே. (௨௫)

### சாமந்தர்.

வருந்திற லரசர் தங்கள் மரபினிற் கன்னி தன்பாற்
பொருந்திய களவு தன்னிற் புணர்ந்திட வந்த மைந்தர்
பெருந்தகை யரச னுக்குப் பெண்ணிடுங் குடியு மாகித்
தருந்திறற் றுணை சூழுஞ் சாமந்த ராகி வாழ்வார். (௨௬)

### பூணூற் கணக்கர்.

ஆசுர மணம தாக வந்தண ரரசர் தங்கள்
மாசிலாக் கன்னி தன்னை மணந்திட வந்த மைந்தர்
பூசனை பகவ திக்குப் புரிந்துமுந் நூலும் பூண்டு
காசினி யரசர் கோயிற் கணக்கரு மாவ ரன்றே. (௨௭)

### மல்லர்.

தற்றொழி லரசர் சாதி தருமத்தை யிகழ்ந்த மன்னன்
நற்றொழி லிகழா மன்னர் நாரியைத் தழுவ வந்தோர்
சொற்றொழில் தட்டி முட்டித் தோள்தட்டிக் கட்டிப் பாய்ந்து
மற்றொழில் நடனஞ் செய்யு மல்லர்க ளாவ ரன்றே. (௨௮)

### பண்டிதர்.

அந்தணர் வசியர் மாதை யருமறை விதியிற் புல்க
வந்தவன் பண்டி தஞ்செய் மறைபவ னாகு மிக்க
தந்திர மருந்தி னோடு சாத்திரத் தொழிலும் பூண்டு
முந்திய மறையோர்க் கென்று முறையினிற் பிணிக டீர்ப்பார். ()

### கைக்கோளர்.

செட்டியர் கன்னி தன்னைத் திருமறை யாளன் புல்க
இட்டமாய் வருங்கைக் கோள ரிருங்கொடிக் கயிறு பின்னிச்
சிட்டரா லயத்துக் கேற்ற திருக்கொடி யாடை நெய்வர்
நட்டுவர் தாமு மாவர் நாடகத் தொழில்கள் பூண்டே. (௩0)

### குயவர்.

புயமுற வந்த ணாளர் புல்கவே வணிகர் மாதின்
மயலுறு களவில் வந்தோர் மனைவர்மட் கலங்க ளெல்லாம்
முயலுறு வேள்வி யோர்க்கு முகப்பணி தானுஞ் செய்வர்
குயவராய் வேள்வி தன்னிற் கொல்லுவர் பசுவுந் தானே. (௩௧)

### மருத்துவர்.

கருத்துடன் வணிகர் தங்கள் கன்னியைக் கைப்பி டித்துப்
பெருத்திடு மவனி பாலன் பெற்றிடும் பால ராவர்
திருத்தமாய் வருநோ யெல்லாந் தீர்த்திட வல்ல ராய
மருத்துவ ராகி வாழ்வர் வாகட நூலுங் கற்றே. (௩௨)

### கோமுட்டி.

வேறு.

கறைவேல் மன்னர் வணிகர்குலக் கன்னி யிடத்திற் றரும்பு தல்வ, ரிறையா மரசர் குலதரும மியற்றா திராச விதிதொறும், நிறையாய் விற்கும் பலபண்டம் நிறைந்துங் கடைக ளறப்பரப் பிக், குறையாச் செட்டுத் தொழில்பயிலுங் கோமுட் டியெனுங் குலமாவார். (௩௩)

### பொன் வாணியர்.

வேறு.

நீணில வலயங் காக்கு நிருபன்முன் வணிகர் மாதின்
பூணிணை யுடைய கொங்கை பொருந்திப களவில் வந்தோர்
ஆணியு நிறையுங் காட்டு மாடகங் கோட கத்தின்
வாணிபம் புரிந்தி டும்பொன் வாணிப ராகி வாழ்வார். (௩௪)

### கவறைகள்.

இடைந்திடுங் காதல் கூர விளமுலை வணிகர் மாதை
அடைந்திடும் வணிகன் றன்பா லருங்கள வதனில் வந்தோர்
மிடைந்திடுஞ் சங்க ராகி மிளிர்கவ மணிக ளெல்லாங்
கடைந்திடுந் தொழிலும் பூண்டு கவறைக ளாகி வாழ்வார். (௩௫)

### உவைச்சர் (ஓச்சர்.)

சூத்திரர் மாதைப் பார்ப்பான் சோர்மணம் புணர வந்தோர்
பூத்திரள் கொண்டு காளி பூசனை புரிவா ராகி
மாத்திரை விளங்கு பேரி மத்தள மியற்றுந் தாள
சாத்திரம் பயிலும் பார சவரெனு முவைச்ச ராவார். (௩௬)

### கொந்தக வேளாளர்.

குலங்கிள ரரசன் வேளான் கோதையை வேட்க வந்தோர்
இலங்குகொந் தகவே ளாள ரெனுங்குலந் தன்னை யெய்தித்
துலங்கிய மனுநூல் மார்க்கஞ் சோர்ந்தவர் சோரச் சோர
நலங்கிள ரரச ராணை நடத்துவித் திடுவர் தாமே. (௩௭)

### சவள வேளாளர்.

கவளப்போர் வேள வேந்தன் களவின்வே ளாளர் தங்கள்
பவளச்செவ் வாய்ம டந்தை பணைமுலை யணைய வந்தோர்
துவளப்போர் செய்து வேந்தன் சொற்படி நடவா தோரைச்
சவளத்தால் வாட்டு கின்ற சவளவே ளாள ராவர். (௩௮)

### மாவுத்தர்.

அறத்தில்வா ழந்த ணாள ரகத்திடுங் குற்றங் கண்டே
புறத்திடு மாதைப் பார்ப்பான் புணர்ந்திட வந்த மைந்தர்
மறத்தவெங் களிறு காத்து மாவுத்த ராகி மாறாத்
திறத்துடன் கவள நல்கிச் சீவியம் பெற்று வாழ்வார். (௩௯)

### சேனைக்கடையர்.

அடைவுறு வணிகன் காத லணிந்துவே ளாளர் தங்கள்
புடையுறு கொங்கை மாதைப் புணர்ந்திட வந்த மைந்தர்
தடையற வரசி ருப்பிற் றாம்பூல முதலா யுள்ள
கடைபல பரப்புஞ் சேனைக் கடையராய் வாழ்வா ரன்றே. (௪0)

### பரிக்குலத்தார்.

அரிக்குல நீல மாலை யணிபவர் களவிற் புல்குஞ்
சரிக்குல மாது தந்தோர் தந்துபுற் கவள மாதி
கரிக்குல மரச ரேறிக் கவனமாய் நடத்து கின்ற
பரிக்குலம் பாது காக்கும் பரிக்குலத் தவராய் வாழ்வார். (௪௧)

### சுருதிமான்.

கைதவ மாக வேளாண் கன்னியை மறையோன் புல்க
வெய்தினோர் சுருதி மான்க ளெனுங்குலந் தன்னை யெய்தி
மொய்தரு வனத்தி லேன முயல்கலை யனைத்துங் கொல்லுஞ்
செய்தியே தமது வாழ்க்கை சிவன மாகி வாழ்வார். (௪௨)

### பாய்வாணிகர்.

தணிவிலா மயலால் வேளாண் தையலைக் களவிற் புல்கும்
வணிகர்தம் புதல்வர் பற்பாய் வாணிக ரென்னும் பேரா
யணிபெறுங் கோரை கீறி பைந்துவன் னத்தி லாய
பணிபல செய்ய வல்ல பாய்த்தொழில் புரிந்து வாழ்வார். (௪௩)

### சாலியர்.

வேலிய லரசர் சாதி மின்னினை வணிகன் வேட்டுச்
சூலிய ராவ தற்குத் தோய்ந்திடத் தோன்று மைந்தர்
நூலிய லான பாவி னுடங்குமென் படங்கு நெய்யுஞ்
சாலிய ராகுஞ் சாதித் தன்மைய ராகி வாழ்வார். (௪௪)

### யாழ்ப்பாணர். *

வசையுற வணிகன் வேட்ட மறைக்குல மாதர் காதல்
நசையுறப் பெற்ற மைந்தர் நரம்புறு கருவி தன்னி
லிசையுறக் குரலைக் கேற்ற விரலினல் விரவு மோரே
ழிசையினை யியற்ற வல்ல வியாழ்ப்பாண ராகி வாழ்வார். (௪௫)

---

* யாழ் வாசிக்கும் பாணச்சாதி.

### தீட்சை.

ஆசிலா வனுலோ மத்தா ரவர்சோரத் தந்த ராளர்
மாசில்சா லியரே சூதர் பாகத ரென்னும் பேரி
லேசிலாப் பிரதி லோம ரென்னுமிம் மூவர் தாமும்
தேசிக னருளுஞ் சைவ திட்சையி னுரிமை பூண்பார். (சசு)

### சிற்பர்.

மருத்துவர் நூற்க ணைக்கர் மாதினை மணக்க வந்தோர்
தரித்தமுந் நூல ராகித் தக்கவேள் வியுமி யற்றிப்
பெருத்திடுந் தெய்வ பேதப் பிரதிமை கோபு ராதி
திருத்தமாஞ் சிற்ப நூலாற் செய்திடுஞ் சிற்ப ராவார். (சஎ)

### சாணி.

ஈட்டிய மறையோர் மாதை யிகலடர் வேந்த னின்பக்
கோட்டிசேர் களவில் வந்தோர் குரகதச் சாணி யோராய்
ஓட்டியே நடத்திக் காலா லுதைந்துகை யுறைதற் காகக்
காட்டியே துரக தத்தின் கதிபல நடத்து விப்பார். (சஅ)

### மீன்பள்ளி.

குறிதரு வணிகர் தங்கள் கோதைமான் மறிக்கண் டாவ
மறிமது வருந்திப் புல்க வருஞ்சேனைக் கடையான் றந்தோர்
நெறிதரு குளத்தி லாற்றில் நேர்படு குச்சா லூற்றால்
பறிபடு கொளுமீன் மீளப் பறிக்குமீன் பள்ளி யாவார். (சகூ)

### பட்டணவர்.

வேறு.

ஊனைக் கடையும் படைவானை யுறைப் பொருந்துங் கறை வேலை, மானைக் கடைக்கண் ணல்மருட்டும் வணிகத் திருவாள் மணிக்கொங்கை, சேனைக் கடையா ருறவந்தோர் திரைவா ரிதியிற் பிடித்துவரு, மீனைக் கடைக டொறும்விற்கும் வித்தைப் பட்டணவ ரெனவாழ்வார். (ருo)

### சேடர்.

வேறு.

மெய்ப்திகழ் வணிகன் வேட்ட வேதியர் மடந்தை தந்தோர்
செய்திடுந் தொழிலும் பூண்டு நெடியமால் கீர்த்தி யெல்லாம்
எய்துவை கான சந்தோ ரிசைத்திட வினிது கேட்குஞ்
செய்திய ராகி வாழுஞ் சேடர்சே ணியர்க ளாவார். (ருக)

### இடையர்.

மேயவே ளாளர் காம வேள்பூர வேட்கை கூர்ந்தே
நேயமார் வணிகர் காதல் நேரிழை தன்பால் வந்தோ
ராயரா யாடு மேதி யானிரை மேய்ப்போ ராகித்
தூயபா றயிர்நெய் விற்குந் தொழிலின ராவ ரன்றே. (ருஉ)

### ஊசிச் சிற்பியர்.

மன்னவர் மயிலை யாயன் மருவவே வந்த மைந்தர்
பன்னிய தையற் கான படம்பல நறுக்கிக் கூட்டி
முன்னிய தொழிலெ டுத்து முறுக்கிய சரடு கோத்துத்
துன்னிய வூசிக் கான தொழில்கொள்சிப் பியர்க ளாவார். (ருங)

### சேக்கு வாணியர்.

சொற்றிறல் வணிகர் மின்பாற் சூத்திரன் சோரந் தன்னிற்
பெற்றிடு மைந்தர் திண்டப் பெருதவா ணியர்க ளாகிப்
பற்றிய வுப்பு விற்பர் பதஞ்செய்தெள் ளாட்டி விற்பர்
உற்றிடு முச்சிக் கப்பா லூர்புக வரிய ராவார். (ருச)

### காவற்பள்ளி.

இடையர் தாம் வனிதர் மாதை யிசைந்திட வந்த மைந்தர்
மிடைதரு பகழி பூட்டும் விற்றொழில் வல்ல ராகிப்
புடைதரு மவனி மூதூர் பொருந்தியே யெல்லை காட்டிப்
படைபல வியற்றுங் காவற் பள்ளிக ளாவ ரன்றே. (ருரு)

### ஈரங்கோலி.

### வேறு.

வாரங் கோலி யந்தணிதன் மணிமா முலையை வணிகன் ருன், சோரங் கோலி யணைந்திடவே தோற்றும் புதல்வர் துகில் வெளுக்கு, மீரங் கோலி யெனப்பேரா மியல்சேர் தேவா லயந் தனக்குக், காரங் கோலிக் கலைவெளுப்பர் கலைநால் வேதங் கற் றேற்கும். (ருசு)

### தட்டார், கொல்லர், கன்னர், தச்சர்.

செட்டார் சேனைக் கடையானைச் செறிந்தந் தணிதான் றரு புதல்வர், தட்டார் கொல்ல ருடன்கன்னர் தச்ச ரென்னும் பேர் பெற்றுக், கொட்டார் வெஞ்சூத் திகைபற்றுக் குறடு முதலாம் பலகருவி, முட்டா தைம்பொன் னிரும்புமர முதலாம் பணதி பலசெய்வார். (ருஎ)

### சான்றார்.

### வேறு.

அதுலமா மரசர் சாதி யரிவையைப் பெருவெள் ளாளன்
புதுமனம் புணர வந்த புத்திரர் சான்றா ராகி
முதுபனை யிஞ்சிற் றாக்கு மூட்டியில் முட்டி யூறு
மதுவினைக் காய்ச்சி விற்று வரும்பொருள் விரும்பி வாழ்வார். ()

### களாயர்.

துட்டவேள் பொரவே நேர்ந்த சூத்திரன் சோரந் தன்னி
லிட்டமா மரசர் மாதை யிசைந்திட விசைந்த மைந்தர்
அட்டமா மலகின் மேற்பாய்ந் தருங்கர ணங்கள் கொண்டு
நட்டகம் பத்தி லேறி நடத்திடுங் களாய ராவார். (ருகூ)

### மறவர்.

திரந்தரு மறையோர் மாதைச் சேர்ந்துகொந் தகவே ளாளன்
கரந்தழு வியமெய்க் காதற் களவிலே வந்த மைந்தர்
உரந்தரு மரவை நாழி யுழக்கொடு மரக்கா லாக
மரந்தனைக் கடைய வல்ல மரவராய் வனத்துள் வாழ்வார். (சூ0)

### பூமாலைக் காரர்.

### வேறு.

பாமா லையுடன் வெட்சிபுனை பார்மன் னவர்தங் குலந்தன்னில்
தேமா லைநறுங் குழன்மாதைச் சேனைக் கடையா னுறவந்தோர்
மாமா லபிசைந் தரிவையரை மணப்போர் தமக்கு மணஞ்சேரும்
பூமா லைதனை விலைக்குதவும் பூவா ணியரே யாவார்கள். (சூக)

### மூச்சியர்.

### வேறு.

இச்சையின் மறையோர் கன்னி யிணைமுலை வணிக னுவான்
ஒச்சிய மாக வன்மை யுற்றிடப் பெற்ற மைந்தர்
மூச்சிய ராகிச் செம்பொன் மூழுக்கஞ்சத் தகட முக்கி
மெச்சிய வன்ன பேத விசித்திரப் பணதி செய்வார். (சூஉ)

### உறைகாரர்.

மறையவர் கன்னி தன்னை வணிகனுற் றணைய வந்தோர்
துறைபல வல்ல ராகித் தோல்பல பதம் பிடித்துக்
கறைபற விழைத்துக் கூட்டிக் கலனையுங் கருவிக் கேற்ற
உறைதனைச் சமைக்க வல்ல வுறைகார ராவ ரன்றே. (சூந)

### அம்பட்டர்.

வழுவற மன்னர் மின்னை வணிகன்றன் மைய லாகித்
தழுவவே வந்த மைந்தர் சாதிநால் வகையுள் ளோர்க்குத்
தொழுதருங் கத்தி திட்டித் துடைதனிற் றுடைத்து முற்றும்
பழுதற நாபி யின்கீழ்ப் பணிசெயம் பட்ட ராவார். (சா௪)

### கூத்தாடி.

பகைத்தபோ ரடக்கு மன்னர் பாவையைச் சூத்தி ரன்றன்
முகைத்தனங் களவு தன்னில் முயங்கிட வந்த மைந்தர்
மிகைத்திடு நாட கத்தில் வெகுசாரி விகற்ப மெல்லாந்
தொகைப்புட னடித்து நின்று துதிக்குங்கூத் தாடி யாவார். (சாரு)

### கரையார்.

### வேறு.

உரைபெற் றிடுநால் வேதியர்த முயருங் குலத்தி லொண்டொடிதன், வரையற் றிடுபொற் கொங்கையுற வரும்வே ளாளன் றரும்புதல்வன், திரையெற் றிடுநன் னதிகடக்கச் செல்வோர் தம்மை யோடததாற், கரையேற் றியதன் பலன்கவருங் கரையா ராவர் கரைதுறையில். (சாசா)

### மாதுலவர்.

### வேறு.

காய்ந்தவேள் கணைக ளேவக் கன்னுறு வணிகர் மாதைத்
தோய்ந்திடுஞ் சுருதி மான்றன் சோரத்திற் சோர மைந்தர்
வாய்ந்திடு முன்கை சுற்றும் வலையினை வனைத்து வீசிப்
பாய்ந்தமீன் குவல யத்திற் பற்றுமா குலவ ராவார். (சாஎ)

### வ லை ய ர்.

சிலையிகழ் மன்னர் தங்கள் தெரிவையைச் சோரந் தன்னில்
முலையுற வணிகன் சேர்ந்து முயங்கிட வந்த மைந்தர்
வலையராம் பேர்ப டைத்து வனத்துள்ள கனிகி ழங்கு
விலையுற விற்றுக் கான மீதினில் வாழ்வா ரன்றே. (சாஅ)

### வே டு வ ர்.

வாட்டிவெஞ் சமர டக்கு மன்னவர் கன்னி தன்னைக்
கோட்டிகொள் வணிகன் றன்பாற் கூடியே களவில் வந்தோர்
காட்டினில் வலைவ னைத்துக் கலைபுலி புல்வா யேனம்
வேட்டைக ளாட வல்ல வேடவ ராகி வாழ்வார். (சாகூ)

### சேப்புக்கன்னர்.

அம்புய முகிழக் கொங்கை யந்தணி யாகந் தன்னைப்
பைப்புய முடிவ ளைக்கப் பட்டசா லியன்பால் வந்தோர்
வெம்புகை யழலை மூட்டி வியன்குகை நனிலு ருக்குஞ்
செம்பினாற் பணதி செய்யுஞ் செப்புக்கன் னர்க ளாவார். (எ0)

### குன்றுவர்.

* மன்றாடி வணிகர் மாதை மணந்திட வந்த மைந்தர்
குன்றாத குன்றில் வாழுங் குன்றுவ ராகிக் குன்றிற்
பொன்றாத பொருள ளைத்தும் புவியினிற் கொணர்ந்து விற்றே
அன்றாத மரைமா னேன மடர்ந்திடும் வேட்டை செய்வார். ()

### சவணர்.

வரசரி தம்ப யின்ற மன்னவர் மயிலை வேட்டுச்
சரசமா யந்த ணாளன் றந்திடுஞ் சவண ரென்போர்
அரசர்வெம் பகைமு டிப்ப ராம்பெரு மகமுஞ் செய்வ
ருரைசெயுந் தந்தை தாய ருறுகுல தருமம் பூண்டே. (எஉ)

### நிலத்தறியார்.

கலைத்திறற் சவணன் புல்குங் கைக்கோளர் மடந்தை தன்றாள்
மிலைத்தவெண் பிறைபொன் கோயி லன்றியே வெள்ளி தன்னில்
மலைத்திற முலைத்த ளத்தின் மங்கையர் நடனங் காட்டும்
நிலைத்தறி யார்க ளாகி நெடுந்துகில் நெய்து வாழ்வார். (எங)

### காணிக்கர்.

வேதியன் வணிகர் சாதி விதவையைப் புல்க வந்தோர்
ஓதரு வாதத் திர்வை யொழுகவை யுரைக்க வல்ல
சாதியூர்க் கணக்க ராகித் தரும்பெரும் வேள்வி தன்னிற்
றீதிலா மறையா ளர்க்குச் செய்வர்மேற் றொழிலுந் தானே. (எச)

### பரவர்.

குரவுறு மலையில் வாழுங் குறவனுக் குறவு பூண்டு
வரைவுறு வணிகர் தங்கண் மடக்கொடி பெற்ற மைந்தர்
விரவிய காள வாயில் வெந்தவெண் சுண்ணத் தோடே
பரவைமீன் படுத்து விற்கும் பரவர்க ளாவ ரன்றே. (எரு)

### கடையர்.

சுருதியந் தணர்தம் மாதைச் சுருதிமா னணைய வந்தோர்
பருதிவந் தெழுக டற்குட் பருவலை வளைய வீசிப்
பொருதலைந் தெழுந்து வீழும் புலால்கமழ் கொடுமீ னெல்லாங்
கருதியே கொணர்ந்து விற்குங் கடையபில் கடைய ராவார். (எசு)

---

* இடையன்.

### அநுலோமர்க்குந் நுடக்கறுக்கிற வண்ணார்.

கொந்தக வேளா ளன்றன் கோதைபாற் களவிற் சான்றான்
தந்திட வந்த மைந்தர் சந்தத மநுலோ மர்க்கு
நிந்தனை யாக மாதர் நீத்திடுந் துகிலெ டுத்து
வந்தவை தனைய ழுக்கு மாற்றிடும் வண்ணா ராவார். (எஎ)

### அநுலோமர்க்கு வெளுக்கிறவர்.

தெள்ளாவி விரைகள் மேய்ப்போன் சிறந்தவந் தனார்தம் மாதை
யுள்ளாவி யுருகிக் கொங்கை யுறவணைந் திடவே வந்தோர்
எள்ளாவிவ் வுலகந் தன்னி லிசைந்திடு மநுலோ மர்க்கே
வெள்ளாவி தன்னிற் றாசு வெளுத்திடும் வண்ணா ராவார். (எஅ)

### பிரதிலோமர்க்கு வெளுக்கிறவர்.

இப்பாரி லரசர் மாதுக் கிட்டமே பயிலு மொட்டன்
செப்பாரு முபய கொங்கை செறிந்திட வந்த மைந்தர்
தப்பாமற் பிரதி லோமர் தருந்துகில் வெளுக்க வல்ல
கைப்பான்மை வண்ணா ராவர் கைதொடற் குரிய ரன்றே. (எகூ)

### நீலவண்ணார்.

சாலவந் தனிதன் கொங்கை சான்றானுற் றணைய வந்தோர்
மேலமர் கறைகொள் சீலை வெளுத்திடும் வண்ணா ராவர்
மாலமர் சுருதி மானை வண்ணாத்தி மருவ வந்தோர்
நீலமாஞ் சாயந் தீரும் நீலவண் ணார்க ளாவார். (அ0)

### அரிப்பர்.

தொடுத்தவண் ணாத்தி கேண்மை சுருதிமான் களவிற் பெற்றோர்
படுத்தமண் முழுதுந் தொட்டில் பலகையிற் கரைத்து வாரி
யெடுத்தபொற் சன்னந் தன்னை யிரதத்திற் சேர்த்து ருக்கி
யடுத்தவங் காடி விற்கு மரிப்பர்க ளாவ ரன்றே. (அக)

### இருளர்.

மருளிலா மறையோர் மாதை வல்லிரும் பூது வோன்றான்
வெருளுறு காத லாலே வேட்டிட வந்த மைந்தர்
இருளுறு மிருள ராகி யிருங்கரிச் சாரல் தன்னிற்
பொருளுறு நிதியங் காப்பர் பூபால ரேவல் பூண்டே. (அஉ)

### கணியர்.

துணிதல்கூர் காதல் பூண்டே சோரத்தி லிரும்பை யூதும்
பணிதரு குலத்தோன் சேர்ந்த பார்ப்பனி தந்த மைந்தர்
தணிதரு குலத்து ளோர்க்குச் சாதிவஞ் சகமுஞ் சாற்றிக்
கணிதமுந் தமிழி னாலே கணித்திடுங் கணிய ராவர். (அஙூ)

3

ஒட்டர்.

இட்டமா மன்னர் மாதை யிசைந்தசா லியன்பால் வந்தோர்
கொட்டமே தருகுந் தாலி கொண்டுமண் முழுதுங் கோலி
வெட்டவே வல்ல ராகி வெட்டிய மண்ணை யெத்து
மொட்டகம் போற்சு மக்கு மொட்டரா யுழல்வா ரன்றே. (அச)

கடிகைப் புலவர்.

வேறு.

படிவிப் பிரர்வே ளாளர்குலப் பாவை யாங்கள் ளிகைசோரத்
துடிநற் றேளைப் புல்கியிட வுண்டா மவனற் றமிழாலே [வர்பாற்
யடையைத் தொடையைப் பாவதனை யடைவாய்ச் சொல்லி யவர
கடிகைப் புலவ ரெனவிசைவாற் கவிகள் பாடித் திரிவாரே. (அரு)

பறையர்.

வேறு.

மறையவர் மங்கை தன்னை மணந்தசூத் திரன்பால் வந்தோர்
குறைவில்லான் நகர்க்கு நூறு கோற்றறைக் கப்பு றத்தி
லுறைபவ ராகி யூர்க்கு ளுச்சியிற் பின்பு காராய்ப்
பறைதனைத் தோளிற் றூங்கும் பறைக்குல மாவ ரன்றே. (அசு)

ஊமைகள்.

ஒழுக்கமா மறைக்கு லத்தி லொன்டொடி யுபய கொங்கை
வழக்குறு களவு தன்னில் மணந்தசூத் திரன்பால் வந்தோர்
அழுக்கறக் கார நீவி யாடைகள் வெளுப்போ ராகி
யிழுக்குறு பறையர்க் காளா யிளமைக ளாவ ரன்றே. (அஎ)

சக்கிலியர்.

நூலினைத் தரிக்குந் தக்கோர் நுடங்கொடி யிடங்கொள் கொங்கை
சாலியன் றழுவ வந்தோர் சக்கிலிக் குலம தாகித்
தோலினைத் துவர்ப்பி டித்துச் சுவடற நறுக்கிக் கூட்டிக்
காலினுக் கிடுசெ ருப்புக் கட்டியே விற்பா ரன்றே. (அஅ)

தோட்டியர்.

கொட்டமார் புலையன் றன்னைக் கூடமங் கணிதன் மைந்தர்
கட்டவிழ்த் தரும் பிணத்தின் கலைதனை மகிழ்ந்து டுத்தே
யிட்டவாய்க் கரிசி தன்னே டமைத்திற் றழலி னலே
சுட்டமாட் டிறைச்சி தின்னுந் தோட்டிய ராவ ரன்றே. (அக)

### நக்கவாரிகள்.

புலைபராய் நாய்தின் போனைப் புல்குமங் தணிபால் வந்தோர்
கொலைசெயும் மனிதர்க் கஞ்சிக் குறுகிடா தகல நின்று
விலைபெறு மினிய பண்டம் விற்றரும் பொருள்கள் வவ்வி
மலைநழைஞ் சதனி னக்க வாரிக ளாவ ரன்றே. (௬0)

### சோனகர்.

சவுனக முனிபாற் றோன்றிச் சதுமறை யொழுக்கந் தேறி
யவமதா யாசா ரங்க ளழிந்துவே தியர்வி லக்க
மவுனமா யதர்வ ணத்தை வாய்க்கொண்டு புலால ருந்தி
உவமையில் வடிவ மாறி யுறுநர்சோ னகரே யாவார். (௬க)

### பரங்கர்.

உரைதரு நக்க வாரி யோதுநல் வேத மாந்தர்
மரபினில் மங்கை கொங்கை மணந்திட வந்த மைந்தர்
கரைதனில் வாழ்வார் போலக் கடற்சோங்கு வீட தாகிச்
சுரையுடன் றசைய னைத்துந் துய்த்திடும் பரங்க ராவார். (௬உ)

### கருவர். *

வானகக் கதிரைப் போற்று மறையவர் குலத்து மாதை
யூனக மகிழ்ச்சி கூரு மொட்டர்வந் தொட்ட வந்தோர்
சோனகர் பரங்க ரென்றே சொல்லிய சாதி பேதத்
தினர்கள் வெளுப்பெ டுத்தங் கிசைந்திடுங் கருவ ராவர். (௬)

### சாதியுயர்ச்சி.

அந்தணன்று னரசன்ற னணங்கை வேட்டங்
　　கவன்பயந்த கன்னியையங் தணர்க்கே நல்க
வந்தவழி முறையைந்தில் வந்த மைந்தர்
　　மாசறுபூ சுரராவர் வணிக ரன்பாற்
றந்திடுபைந் தொடிதனையந் தணரே வேட்கத்
　　தலைமுறையோ ராறினிலந் தணரே யாவர்
முந்துறுசூத் திரரணங்கை மறையோன் வேட்க
　　முறையேழு தலைமுறையில் மறையோ ராவார். (௬ச)

அருமந்த பூபாலன் வணிகர் தங்க
　　ளணங்குதனைத் தலைமுறையைந் தடர வேட்டுத்
தருமைந்தர் கனகமணி மவுலி சூட்டத்
　　தக்கநர பாலரெனத் தரணி யாள்வார்

* பரங்கருக்கும் சோனகருக்கும் வெளுக்கிற வண்ணார்.

கருமந்தான் வழுவாது பெருவெள் ளாளன்
 கன்னிதன்னை மன்னவனே கருதி வேட்க
வருமைந்தர் தலைமுறையோ ராறு தன்னில்
 மாசிலா மரபுபெறு மன்ன ராவார். (கூரு)

மிக்கபெரு வெள்ளாளன் கன்னி தன்னை
 வேட்டவணி கன்பயந்த பிள்ளை பின்னுந்
தக்கவணி கன்றனக்கே யுதவ வைந்து
 தலைமுறையில் வணிகரெனத் தலைவ ராவார்
குக்குடத்தின் வர்க்கமுட னாட்டு வர்க்கங்
 குதிரைவர்க்கந் தானுமிந்தக் கொள்கை தன்னி
லொக்குமென விருபிறப்பாய் மருபி றப்பி
 லுயர்பிறப்பா வதுமுலகத் துள்ள தாமே. (கூசு)

வேறு.

வியந்திடும் பள்ளை யாட்டில் மேலுறு கொடியா டாக
வுயர்ந்திடுங் குருளை யெல்லா முச்சித மச்ச கந்தி
பயந்திடு வியாதர் பெற்றோர் பாரர சாள்கை யிவ்வா
றிசைந்திடு மனுலோ மத்தி லிசைவர்கள் தந்தை செய்கை. (கூஎ)

விடுத்திடு கொடியா டேற விளைந்தசெம் மறியின் குட்டி
தொடுத்தவா டிரண்டின் றன்மை தோற்றல்போல் மாற்றார்சேனை
படுத்தரு யோகஞ் செய்யும் பரசுரா மன்ற னைப்போ
லடுத்ததாய் தந்தை செய்கை யாகுவ ரனுலோ மத்தர். (கூஅ)

சாதித் தாழ்ச்சி.

உடையவத் தொழிலை நீத்தே யுயர்குலத் தந்த ணாளர்
தடையறத் தமக்குக் கிழாஞ் சாதியின் றொழிலே சாதி
யடைவினில் வருமைந் தாறே ழாந்தலை முறையி லென்னுந்
தொடைதனி லரசர் செட்டி சூத்திர ராவ ரன்றே. (கூகூ)

வெட்டுவே லரசர் தங்கீழ் மேவிய சாதித்தன்மை
யொட்டியே தமது தன்மை யொழிந்ததி லழுந்திச் செய்கை
தட்டின ரைந்தா றென தலைமுறை தன்னில் நேரே
செட்டியு மாகி வேளாண் செய்கையு மாவ ரன்றே. (க00)

வணிகர்தங் குலமார்க் கத்தை மறந்துதம் நிலையி ழிந்து
பணிதருங் குலத்தோர் செய்கை பற்றியே நிற்ப ராகி
லணைவுறு மோரைந் தாக வணிதலை முறைபொ ருந்திற்
றணிதரு வேளாண் சாதித் தன்மையைப் பெறுவ ரன்றே. (க0க)

இடருறு போதி னுரு மிருங்குல தரும நீத்தே
விடருறு தொழிலுஞ் செய்வர் விளைந்ததவ் விடர்தா னீங்கிற்
றொடருறுந் தமது சாதித் தொழிலகப் படாது பின்னு
மடர்வுறப் புரிவ ராகி லவர்குலப் பதித ராவர். (௧0௨)

ஓதில ரெனினுஞ் செய்கை யொழிந்திடா ரென்னிற் பார்ப்பார்
கோதில ராவர் செய்கை குன்றியே நின்று ராகி
லேதில ராவ ரென்றே யெடுத்தநூ லியம்பு மன்னோர்
சாதிக ளாசா ரத்தின் றகைமையாற் றலைமை யாமே. (௧0௩)

## வாழி.

அலகிலாச் சாதி பேதத் தவர்நெறி யோங்கி வாழி
பலகலை சிவாக மங்கள் பார்மிசை தழைத்து வாழி
திலகமாய்ப் புலிய னூத்துஞ் சிவமய மாக வந்த
வுலகநா தன்றன் கீர்த்தி யுலகினில் வாழி வாழி. (௧0௪)

## சாதிபேதவிளக்கம்

முற்றிற்று.

---